வாழும் போது பொருட்களைப் பற்றிப் பிடிப்பதற்கும் தாவி அன்றாட வேலை-களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பெருவிரலின் விருத்தி கைகளுக்கும் அவசியமாக்கப்பட்டது. எனவே பெருவிரலை இயக்கும் தசைகளின் விருத்தி காணப்பட்டது. அத்துடன் அதிகளவு செயற்பாடாக பெருவிரல் மற்றைய நான்கு விரல்களுடனும் எதிரொட்டவும் தன்மையும் பெற்றுக் கொண்டது. இத்தன்மையை பெற்றுக் கொண்டமையே கையானது வேறும் நுணுக்கமான வேலைகளைச் செய்யக் காரணமாயது. அதாவது குரங்கு தன்னை மனிதனாக மாற்றியமை இதற்கான மிக்கிய காரணி உழைப்பு என்றும் கூறலாம். இத காணப்பட்டமைந்து கையின் ஊடாக மூளையின் வளர்ச்சியும் காண-ப்பட்டது. இது மனிதருடைய இவ்விரு உறுப்புகளிலும் அடங்கி செயற்படு கையையும் கையில் உள்ள விரல்களின் நுணுக்கமான தொழிற்-பாட்டையும் கட்டுப்படுத்த மூளையின் விருத்தியும், மூளையின் விருத்திக்-கேற்ப கையின் அமைப்பில் மாற்றமும் ஏற்பட்டன. அதாவது மூளைக்கும் கைக்கும் ஏற்பட்ட இசைவான தொடர்பினால் இவ்-விரு உறுப்பும் உயர் வளர்ச்சி ஏற்படக் காணப்பட்டன.

பாய்ந்து தாவி மரங்களைப் பிடிக்கும் போது சமநிலையைப் பேணுவதற்காக நீண்ட வால் காணப்பட்டது. நில வாழ்க்கையை மேற்கொண்டு இரு கால்களில் நடக்கும் போது வால் இடப்பெயர்ச்சிக்கு தடையான உறுப்பாகியது. எனவேஇது காலப் போக்கில் அற்றுப் போயிற்று. இன்றும் நமது உடலில் பல பகுதிக உறுப்புகள் காணப்படவே செய்கின்றன. முள்ளந்தண்டின் நுனியில் வால் என்புகள் குறுகி நான்கு சிறு என்புகளாக இணைந்து காணப்படுகிறது.

மரக்கிளைகளைப் பற்றிப்பிடிப்பதே பிரதான தொழிலாகக் காணப்பட்டமையால் முன் பின் அவயவங்களின் உள்ள விரல்கள் மிகவும் நீளமாக அமைந்திருந்தன. தரையில் நடந்து

Schaffhausen இலுள்ள சுவிற்சர்லாந்து புரட்சிகரக் கட்சி (NPS) க்கு இச் சம்பவத்துடன் சம்பந்தம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இதுவும் ஓர் இனவெறி அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

அகதிகள் மீதான தாக்குதல் பற்றி சுவிற்சர்லாந்து சமஷ்டி பாராளுமன்ற பேச்சாளர் பத்திரிகையாளர்களிடம் பின்வருமாறு கூறியுள்ளார்.

மனித உரிமைகளை மதிக்கும் நடுநிலை நாட்டில் இவ்வாறு நடந்ததை எண்ணி வருந்துவதாகவும் எதிர் காலத்தில் அகதி கொள்கை தொடர்பில் மிகவுமான செயல் முழுமையான சட்டத்தை திருத்துவது பற்றி ஆராய்வதாகவும் இன, மத, நிற ரீதியில் யாரையும் கொலை செய்தால் தண்டம் விதிப்பது பற்றியும் ஆராய்வ தாகவும், மேலும் சின்ரோன் Zug பொலிசாரின் நட வடிக்கை பற்றிய முழு விபரத்தினை அறிவதோடு விசா ரணைக்குழு ஒன்றை அமைக்கப்போவதாகவும் தெரி வித்தனர்.

சுவிஸிலுள்ள சின்ரோன் பொலிசாரை சமஷ்டி பாராளுமன்றம் விமர்சித்திருப்பது இதுதான் முதல் தடவை என பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆனாலும் புதிய சட்டத் திருத்தங்கள் மூலம் இனவெறியர்களின் நடவ டிக்கைகளை முறியடிக்கலாம் என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் இச் சட்டத் திருத்தங்கள் நடைமுறையிலுள்ள ஜேர்மன், அமெரிக்கா போன்ற நாடுகளில் இனவெறி அதி கரித்து வருவதும் இச் சட்டங்கள் அர்த்தமற்றுப் போவதை யும் காணக்கூடியதாக உள்ளது. - மா.நரேந்திரன் ▣

குறிப்பாக மேலும் உலக நாடுகளில் விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமாக போராடிக்கொண்டிருக்கும் போராளிகள் தமது அரசியல் செயல் திட்டமாய் "சோசலிச சமுதாயத்தை கட்டியமைப்பதென்றே" என்று கொண்டுள்ளனர். இவ் நிலைப்பாட்டிலேயே ஏனைய நாடுகளுக்கும் தீர்வாய் புத்திஜீவிகள், புரட்சிகர போராளிகள் முன் வைத்துள்ளனர்.
இவர்கள் சோசலிச நாடுகளில் நடந்த மாற்றங்களையும் மார்க்சிசப் பார்வையிலிருந்து விமர்சனம் செய்வதற்கான காரணங்களையும் தமது ஆழமான ஆய்வுக்கு உட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

உலகிலேயே கம்யூனிசத்தை நோக்கி பாரிய முதல் புரட்சி நிகழ்ந்த போதும் அது ரஸ்யாவிலேயே உறுதியாக முன்னெடுக்கப்பட்டது. இப் புரட்சிக்கு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சக்தியாய்க் கொண்டு போல்ஷெவிக் கட்சி தலைமை தாங்கியது. 1917 இல் லெனின் தலைமையில் அக்டோபர் புரட்சி வெற்றியளித்த போதிலும் அன்றைய புரட்சிகர வர்க்கமாய் கட்சியில் விளங்கிய பாட்டாளி வர்க்கம் பெரும் பகுதி அழிந்து போனது. இதன் விளைவாய் கட்சி போல்ஷெவிக் உறுப்பினர்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டது. அதேவேளை அன்றைய கட்சி உறுப்பினர்களும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதில் உறுதியாகவே இருந்தனர். இதனடிப்படையிலேயே தனியார் மூலதனத்தை அரசு சுவீகரித்ததுடன் குலாக்குகளிடமிருந்து விவசாயப் பண்ணைகளைப் பறித்து கூட்டுப் பண்ணையை ஏற்படுத்தியது.

ரஷ்யாவில் உள்நாட்டு யுத்தத்தால் மிகவும் பலவீனமடைந்திருந்த பொருளாதாரத்தை நிவர்த்தி செய்ய லெனின் புதிய

பெருக்கத்துக்காக குறுகிய காலத் திட்டத்தினை முன்வைத்தார் இத் திட்டத்தினைப் பற்றி லெனின் குறிப்பிடுகையில்

"உற்பத்தி சக்திகளுக்கு நாம் அதிக அழுத்தம் கொடுத்தலும் உற்பத்தி உறவுகள் சம காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனெனில் இவ் உற்பத்தி உறவே சோசலிச சமுதாயத்தை முன்னெடுக்க செய்வதற்கான முன் நிபந்தனையாய் உள்ளது" என்றார்.

லெனினின் மறைவுக்குப் பின் கட்சியின் தலைமைக்கு வந்த ஸ்ராலின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதியாய் முன்னெடுப்பதிலும், கம்யூனிசத்தை நோக்கி முன் செல்வதிலேயே ஒடுக்குமுறையற்ற சமுதாயத்தை படைக்க முடியும் என்று உறுதியாய் நம்பினார்.

அன்று ஸ்ராலினின் தலைமையில் வழிநடத்தப்பட்ட சோசலிசத்தில் விவசாயம் கூட்டு பண்ணை முறையாக்கப் பட்டதோடு தொழிற்சாலைகள் அரசுடைமையாக்கப்பட்டது இது நாட்டு மக்களின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்ததுடன், ஜார் ஆட்சியில் இருந்ததை விட பன்மடங்கு உற்பத்தி பெருக்கத்தையும் கொடுத்தது. இவ் உற்பத்தி பெருக்கத்தினாலேயே அன்றைய பாசிச கிட்லரை தோற்கடிப்பது சாத்தியமாகியது.

அத்துடன் அன்றைய ரஷ்ய மக்களின் வீரத்தியாகங்களும், அயல் நாடான பல்கேரி, ஹங்கேரி, போலந்து செக்கோசெலவாக்கியா, ருமேனியா, யூகோசெலவாக்கியா சீனா போன்ற நாடுகளில் உள்ள கம்யூனிசக் கட்சியின் தலைமையும் அதன் கீழ் போராடிய மக்களும் ரஷ்யாவின் இவ் வெற்றிக்கு கணிசமான அளவு பங்கை அளித்தனர்.

ரஷ்யாவின் இவ்வெற்றியைத் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பாவில் சோசலிச சமுதாயத்தினை ஏற்படுத்துவதற்கான போராடிக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சியினர் தலைமைக்கு, ரஷ்யா இராணுவ உதவியின் மூலம் சோசலிச நாடுகளை உருவாக்கியது. இரண்டாம் உலக மகா யுத்தத்தை தொடர்ந்து கிழக்கு ஜெர்மனியை ரஷ்யா தனது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

சோசலிச அமைப்பு வடிவத்தை பெற்றுக்கொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தில் சுய-மாய் நிற்காமல் ரஷ்யாவில் தங்கி நிற்கும் போக்கு இருந்து வந்தது. இதனாலேயே ரஷ்யா எடுக்கும் முடிவுகளுக்கு, இந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் தமது நிலைப்பாடுகளையும் அவ்வப்போது மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது.

அத்தோடு கம்யூனிஸக் கட்சி அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர் தொழிலாளர்களின் அமைப்பு ரீதியாகவும் அதன் தலைமையை பாட்டாளிவர்க்க அரசியல் அதிகாரத்தில் உறுதியாக கட்ட அன்றைய கம்யூனிச கட்சி அரசு தவறியதாலேயே இன்று அதிகார வர்க்க ஆட்சியாய் சீரழிந்து போவதற்கு அடிப்படையாய் அமைந்தது.

அதேவேளை யூகோஸ்லாவியா கம்யூனிச கட்சி தலைமையிலான "டிட்டோ" அரசு சோசலிச நாடுகளில் இருந்து பிரிந்து குறிப்பாய் ரஷ்யாவிடமிருந்து பிரிந்து தனி-யான பேதத்தை உருவாக்கியதுடன் தொழிலாளர்களை மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வேலைக்கு அனுப்பியதன் மூலம் அத்தொழிலாளர்களுக்கு கூட்டு முதலாளித்துவ சிந்தனையை ஏற்பட வழிவகுத்தது. இத் தலைமை தொடர்ந்து அப்பட்டமான

முதலாளித்துவ பாதைக்கு சென்று அமெரிக்காவை முந்தும் அளவுக்கு சீரழிந்து போனது. இதன் மூலமாக 'சோஷலிச நாடுகள்' ரஷ்யாவின் 'சோஷலிச பாதை' அடியோடு ஒழிக்கப் பட்டது.

சோஷலிச சமுதாயத்தை படைக்கும் நோக்கில் செயல்பட்ட ரஷ்யாவில் உற்பத்தி பெருக்கமே சோஷலிச சமுதாயத்தை படைத்துவிடும் என்று ஸ்டாலின் கருதினார். அதே சமயம் உற்பத்தி உறவுகளும் மாற்றி அமைக்கப்பட வேண்டிய தேவையை ஸ்டாலின் இரண்டாம் கட்டமாக உற்பத்தி பெருக்கத்துக்கே முதன்மை அழுத்தம் கொடுத்தார்.

உற்பத்தி பெருக்கத்திற்காக நிர்வாகிகள் விஞ்ஞானிகள் போன்றோருக்கு பெரும் சலுகை கொடுக்க வேண்டியிருந்தது. லெனினின் தொழிலாளர் வர்க்க அரசு அதிகாரத்தை கைப்பற்றிய போதிலும் தொழிற்சாலைகளை தொழிலாளர்கள் தலைமையில் இயக்கும் அனுபவமின்மையால் இவர்களுக்கு சலுகை கொடுக்க நேர்ந்தது என்பது உண்மையே. இதன் தொழிலாளர்களுக்கு இதனை கற்று கொடுத்தல் கற்று தேர்ந்தவர்களிடம் தொடர்ந்து தொழிற்சாலைகளை நிர்வகிக்கும் பொறுப்புகளையும் அரசியல் அதிகாரங்களையும் வழங்கியிருத்தல் வேண்டும். மாறாக ஆரம்பத்திலிருந்த சலுகை பெற்ற கூட்டமே அதிகாரத்தில் தொடர்ந்தும் இருந்து வந்தது. ஸ்டாலின் அரசு, உற்பத்தி உறவுகளே சோஷலிச சமுதாயத்தை முன்னோக்கி செல்வதற்கான முன்நிபந்தனையாய் உள்ள என்பதை கவனத் தவறியிருந்தார். இத்தவறுகள் முதல் முதலில் ரஷ்யாவில் தான் புரட்சியை நடத்திய நாடாய் இருந்ததையால்

வேறு எந்த நாட்டினதும் அனுபவமில்லாமல், சோசலிச சமுதா யத்தில் காணப்படும் வர்க்க முரண்பாடுகளை பற்றிய ஆய் வினை மேற்கொள்ளாததோடு அதற்கப்பட்ட விருப்பனை விட் டுணர்ந்த சமுதாயம் தானாக வர்க்கமற்றதாய் உருவாகும் என ஸ்ராலின் கருதியதுமே ஆகும்.

அத்தோடு மார்க்ஸ் எங்கெல்ஸ் போன்றோர் தெளிவாக்கி வைத்திருந்த கம்யூனிசத்துக்கு போகும் ஓர் இடைக்கட்டம் தேவையென கூறியிருந்தார்களே அதுவே அவ்விடைக்கட் டத்தில் நிகழும் வர்க்க மாற்றம் அல்லது வர்க்கப் போராட்டம் பற்றி பெருமளவு ஆய்வுகள் செய்யப்படாமையும் இத் தவறுகளுக்கு காரணமாய் அமைந்தது. ஸ்ராலின் கம்யூனிச சமுதாயத்தை உன்னதமாய் நேசித்திருந்த போதிலும் அவரது சில தவறான அணுகு முறைகள் எதிர் விளைவுகளை ஏற்படுத் துவதாகவே அமைந்தது. அன்று அதிகார வர்க்கத்தின் தோற் றுக்கு கட்சியின் தாக்கத்தினை நீடித்த ஆரம்பத்துடன் கட்சிக்குள்ளும் ஒரு அதிகார வர்க்கப் படையே உருவாகி வந்திருந்தது.

இந்த அதிகார வர்க்கம் ஸ்ராலினின் மறைவின் பின்பு அவர் போன்ற சிற்சில நாடுகளை அடைந்தியதன் நோக்கம் "சோசலிச பாதையைக் கைவிட்டு முதலாளித்துவ பாதைக்கு செல்வதற்காகவே ஆகும். பொருளாதாரத்தில் சந்தை முறையை வெளிப்படையாகக் கொண்டதுடன் ஆட்சி பர வழக்கான முறையையும் அமைத்துக் கொண்டனர். இத் தலைமையின் வர்க்க மாற்றம் மற்றைய சோசலிச நாடுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

இவ் அதிகார வர்க்கத்தின் வளர்ச்சி இன்று பெரும்

மூலதனத்தைக் கொண்டு தனியார் உற்பத்தியை பெருக்குவதற்கான அனுமதி உள்ளடக்கியுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் மார்க்சிச கொள்கையை கோர்ப்பச்சேவ் தனியார் மூலதனத்தை ரஷ்யாவில் போட்டு தொழில் நிறுவனங்களை தொடங்கலாம் என அறிவிக்கும்படி நிர்ப்பந்தித்திருக்கின்றது. இங்கு நிகழும் அரசியல் பொருளாதார மாற்றங்கள் கிழக்கு ஐரோப்பாவிலும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

இன்று சோசலிச நாடுகளில் இரண்டு விதமான போக்கினை காணலாம். முதலாவது பகுதியினர் அதிகார வர்க்க ஆட்சியினை தொடர்ந்து ஏற்படுத்துவதற்காக "அரச முதலாளித்துவத்தை" தொடர்ந்து பேண வேண்டும் என்று கோருகின்றனர். புரட்சி நிகழ்ந்த நாடுகளில் அரச முதலாளித்துவம் தோன்றுவது சோசலிச பொருளாதார மேம்பாட்டு வழியாய் படைப்பதற்காகவே. மேலும் அதன் தேவை பூர்த்தி செய்யப்பட்டும் அரச முதலாளித்துவ ஆட்சியை தொடர்ந்தும் நீடிக்க விரும்புவது அதிகார வர்க்கத்தினர் தமது ஆட்சியை நிலை நிறுத்தவே. இவ் அதிகார வர்க்க ஆட்சியே இன்று சீனா, கியூபா, செக்கோஸ்லவாக்கியா, கிழக்கு ஜேர்மன் பல்கேரியா போன்ற நாடுகளில் உள்ளது. இதனாலேயே முதலாளித்துவ பாதைக்கு செல்லும் ஏனைய நாடுகளுடன் முரண்படத் தொடங்கியுள்ளனர்.

சோசலிச நாடுகளின் இரண்டாம் பகுதியினர் அதிகார வர்க்க ஆட்சியின் மேல் பெரும் வெறுப்பை தெரிவித்துள்ளனர். தனியார் மூலதனம் பெருகுவதற்கு திறந்து விடப்படல் வேண்டும் என்றும், அதில் போலந்து, ஹங்கேரி, ரஷ்யா போன்ற நாடுகளில் வெற்றியும் கண்டுள்ளனர். இவர்கள் அதிகார வர்க்க

ஆட்சிக்கு வந்த பிறகு முதலாளித்துவ ஆட்சிமுறையை அமுல்படுத்
தினார்கள். மற்றும் அந்த முதலாளித்துவ ஆட்சிமுறையை
கொண்டுள்ள அதிகார வர்க்க ஆட்சியினர் தங்கள் சொந்த
நாடுகள் எல்லா சமூகமே வருத்தினார்கள். இவர்களது
ஆட்சி சோசலிச பாதையை சோவியத் கொள்கையில்
கொண்ட இவர்களது நடைமுறைகள் பிரதிபலிக்கின்றன.

இன்று சோசலிச நாடுகள் பல சிறிய இனங்களின்
போக்குகளை கொண்டிருந்தாலும் ரஷ்யா எங்கும் பெருந்
தேசம். மற்றும் கிழக்கு ஜெர்மன், போலந்து போன்ற
நாடுகளும் முதலாளித்துவ பாதையை எடுப்பதற்கு வழி
முறையை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றன. அவ்வாறு
இவர்கள் முதலாளித்துவ பாதைக்கு உரு கொண்டுள்ளனர்.
ஆனால் இவர்கள் தங்கள் தலைமையை விட்டு விலகாது
ரஷ்ய தலைமைக்கு சார்புடைய வேண்டியுள்ளனர்.

இருப்பினும் முதலாளித்துவப் பாதையின் வெற்றிகரமா
ன நாடுகளை ரஷ்யா சோவியத் மேற்பார்வையும் இரு
போக்குகளில் சமரசம் செய்தே காப்பாற்றிக் கொண்டுள்ளது.
உதாரணமாக ஹங்கேரியுடனும் கிழக்கு ஜெர்மன் அதேபோல்
உருவான ஹங்கேரியுடன் சோவியத் போராட்டமும் அதே
சமயம் கிழக்கு ஜெர்மன் அரசாங்கம் மக்கள் எதிர்ப்புகளை
தடுப்பதற்கு உதவியளிக்கிறது. முதலாளித்துவ பாதைக்கு போவதை
உருவாக்கிக் கொண்டிருக்கும் ரஷ்யா தனது தந்திரங்களையும்
அமைக்க முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தை புகுந்து பெரும் ஆதி
க்க செலுத்துவதையும் கூடுதல் அதனை எதிர்த்து போராடுதல்
அப்பத்திரிகையை தனது நாட்டில் தடையும் செய்துள்ளது.

இன்று சோசலிச நாடுகளில் வெளிப்படும் அப்படியான

இச் சோசலிச சீரழிவுக்கான ஆரம்பம் ஸ்ராலின் காலத்திலேயே கருக் கொண்ட ஒன்று என்பதை நாம் கருத்தில் எடுக்க வேண்டும்

முதலாளித்துவ நாடுகள் சோசலிச நாடுகளில் நடக்கும் மாற்றத்தினைப் பற்றி வெகுவாக புகழ்கின்றன. இவ் முதலாளித்துவ நாடுகள் சோசலிச நாடுகள் என அழைக்கப்பட்ட நாடுகள் கம்யூனிசத்தை தோற்கடித்து விட்டது என அதை திரிபடைந்த போதே தெரிந்து கொண்ட போதிலும் தமது சொந்த சுரண்டல் முறைக்கு இன்றே கதவுகள் திறக்கப்பட்டமையிட்டு பெருமளவு உதவிகளை உலக வங்கிக் கடனாகவும் கொடையாகவும் வழங்குகின்றனர்.

ஜேர்மன் அரசு சோசலிச நாடுகளில் நடந்த மாற்றங்களினால் தனது சுரண்டல் முறைகளை விஸ்தரித்து வழிவகுத்திருப்பதோடு. அதன் உண்மையான நோக்கம் பறி கொடுத்த கிழக்கு ஜேர்மனை மீண்டும் தன்னோடு இணைப்பதே ஆகும். இவ் நீண்டகால நோக்கினை கருத்திற் கொண்டே கிழக்கு ஜேர்மனியில் இருந்து அகதிகளை வரவேற்றுக் கொண்டிருக்கிறது.

இன்று மேற்கு ஜேர்மனுக்கு படை எடுப்பதைப் போலும் கிழக்கு ஜேர்மன் மக்கள் தாம் "சுதந்திர பூமிக்கு வந்து விட்டதாக" கூறி வருகின்றனர். இவ்வாறே பிற சோசலிச நாடுகளும் முதலாளித்துவத்திற்கு மாறுவதன் மூலம் தாம் 'உயர்ந்த ஜனநாயகத்தை' எட்டுவதாக கூறுகின்றனர். உண்மையில் இவர்கள் நாளை இந்த 'ஜனநாயகத்தின்' கோர முகங்களை சந்திக்கும் போது இதனை அறியப் போகின்றனர்.

சாருதி.

